REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 11உ செவ்வாய் (25—12—56) ★ ★ வெளியீடு: மார்கழி 12உ புதன் (26—12—56) [இதழ் 170

எட்டு பொருள்களுக்கு ஒருமுனையில் விற்பனை வரி

சென்னை, டிச. 24—

எட்டுப் பொருள்கள் மீது மட்டும் ஒரு முனையில் விற்பனை வரி விதிக்க வாய்ப்பளிக்கும் வகையில், 1939-ம் ஆண்டு சென்னை பொது விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா ஒன்று பிரசுரமாகியுள்ளது.

காப்பி, தேயிலை, வெல்லம், மண்ணெண்ணெய், சிமெண்டு, உரங்கள், மோட்டார் வாகனங்கள், குளிர் பதனச் சாதனங்கள் ஆகிய இந்த எட்டுப் பொருள்கள் மீதும் விற்பனை வரி, ஒரு முனையில் மட்டும் 1957-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் விதிக்கப்படும் என்று மசோதா கூறுகிறது.

'ஆளும் கட்சியிடம் கிஞ்சிற்றும் நம்பிக்கை இல்லை'

'மந்திரிகளின் உறுதிமொழி வெறும் தேர்தல் தந்திரமே'

'சர்க்காரின் பசப்பு வார்த்தைகளில் மயங்கிவிடமாட்டோம்'

'மிரட்டலுக்குப் பணிந்து போராட்டத்தைக் கைவிடோம்'

காங்கிரஸ் சர்க்காருக்கு எதிராக ஊழியர்கள் போர் முழக்கம்

சென்னை, டிச. 25—

1957 ஜனவரி 9-ந் தேதியன்று ஒருமணி நேர அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளுவது என்ற முடிவைக் கைவிடுவதற்கில்லை என்று சென்னை சர்க்கார் ஊழியர்கள் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

'சர்க்கார், சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்துசெய்வோம்; ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம்,' என்று மிரட்டியிருப்பதைத் துச்சமென மதித்து ஊழியர்கள் நேற்று பொதுக்கூட்டம் ஒன்றில் கூடி இந்த முடிவை எடுத்திருக்கின்றனர்.

உறுதிமொழிகள்

அண்மையில் மாநில—மத்திய மந்திரிகள், சர்க்கார் ஊழியர்களுக்கு 'இன்னும் கொஞ்சம் உதவி' அளிப்பது பற்றி வழங்கியுள்ள உறுதி மொழிகள் 'வெறும் தேர்தல் தந்திரமே ஆகும்' என்றும், 'அந்த உறுதிமொழிகளால் நாங்கள் மயங்கிவிடமாட்டோம்' என்றும், 'ஆளும் கட்சியிடம் தங்களுக்கு இப்போது கிஞ்சிற்றும் நம்பிக்கை இல்லை' என்றும், 'தேர்தல் காலம்வரை மந்திரிகள் உறுதிமொழிகளை வழங்குவர்—பின்னர், கிறுத்திக் கொள்வர் என்பது எங்களுக்கு நன்ருகத் தெரியும்' என்றும் கூட்டத்தில் பலர் முழக்கமிட்டிருக்கின்றனர்.

"ஜனவரி 9-ந் தேதிய போராட்டத்தை நடத்தியேதீருவோம்" என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சர்க்காரின் மிரட்டல் பற்றிப் பேசிய சிலர், "இந்த மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சப் போவதில்லை; சங்கத்தின் அங்கீகாரத்தை சர்க்கார் ரத்து செய்தால், நாங்கள் புதிதாக தொழிற் சங்க சட்டப்படி எங்கள் சங்கத்தைப் பதிவு செய்து கொள்வோம்; அது மட்டுமல்ல — தேவைப்பட்டால் தேர்ந்த தொழிற் சங்கத் தலைவர்களை எங்கள் தலைவர்களாக ஏற்றுக்கொள்வோம். எங்களுக்குத் தேவையானதெல்லாம், நீதிதான்" என்றும் இடித்துரைத்திருக்கின்றனர்.

சர்க்கார் இலாகாக்களில் ஆட்குறைப்பு

உத்தேசம்பற்றி மேல்சபையில் மந்திரி தகவல்

சென்னை, டிச. 24—

சென்னை சர்க்கார் தலைமை அலுவலகத்திலும், இன்னும் சில இலாகாக்களிலும் ஆட்குறைப்பு செய்வதுபற்றி தாம் யோசித்துக் கொண்டிருப்பதாக நிதி மந்திரி சுப்பிரமணியம் சென்னை மேல் (சட்ட) சபையில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிருர்.

இது குறித்துத் தீவிர பரிசீலனை நடத்தவும் தாம் உத்தேசித்திருப்பதாகவும் கூறியிருக்கிருர், அவர்!

துவக்கத்தில்.........

துவக்கத்தில் தலைமை அலுவலகத்திலும், ரெவினியூ போர்டிலும் ஆட்குறைப்புத் திட்டத்தை அமுல் செய்யலாமென்றும், பின்னர், மாவட்ட நிர்வாக அலுவலகங்களில் இதனை அமுல் செய்ய முற்படலாம் என்றும், ஆனல் இவை உடனடியாகச் செய்யப்பட முடியாதவை என்றும், ரெவினியூ போர்டு, தலைமை அலுவலகம் முதலிய இடங்களில் ஆட்குறைப்புச் செய்வதுபற்றி ஒரு மந்திரி சபை உபகுழு ஆராய்ந்து முடிவு கூறலாம் என்றும் நிதிமந்திரி கூறினராம்.

இந்தியாவில் அணுசக்தி மின்சார நிலையம்?

பம்பாய், டிச 24—

இந்தியாவில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவுக்குள் அணுசக்தி மின்சார நிலையம் அமைக்கப்படக்கூடுமாம்

உணவுத் தானியங்களுக்கு நியாய விலைகள்

ஒரே விலையில் இருப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாம்

சென்னை, டிச. 25—

'அரிசியின் விலை ஒருசமயம் மிகவும் அதிகமாகவும், ஒருசமயம் மிகக் குறைவாகவும் இருப்பதை அரசாங்கம் உணரத் தொடங்கி விட்டது. இத்தகைய நிலைமை மாற்றி வருடத்தின் எல்லாப் பருவங்களிலும் உணவுப் பொருள்கள் ஒரு குறிப்பிட்ட விலையில் இருக்கப் செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது' என்று, சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

நில உடமைக்கு வரம்புகட்ட சட்டம்

சீக்கிரமே வருமென்கிருர் மந்திரி

சென்னை, டிச. 24—

நில உடமைக்கு வரம்பு கட்டும் கொள்கையைச் சென்னை சர்க்கார் ஏற்றுக் கொண்டுவிட்டதாகவும், இதற்கான சட்டம் சீக்கிரமே கொண்டுவரப்படும் என்றும் மந்திரி மாணிக்கவேலர் சட்டசபையில் தெரிவித்திருக்கிருர்.

நியாய வாரச் சட்டத்திற்கான விதிமுறைகள் சீக்கிரமே தயாராகிவிடும் என்றும் வரப்போகும் அறுவடைக்குள் இது அமுலாக்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கிருராம்.

'தேர்தலுக்குமுன் அவை தயாராகிவிடுமல்லவா?' என்று கேட்கப்பட்டபோது, 'தேர்தலுக்கும் இந்த விதிகளுக்கும் சம்பந்தம் எதுமில்லை,' என்றும் அவர் கூறினராம்.

நில உடமைக்கு வரம்பு கட்டும் மசோதா எப்போதுவரும் என்று திட்டமாகக் கூறுவதற்கில்லை என்றும், சீக்கிரமே வரும் என்று மட்டும் அவர் கூறினராம்.

ரூ. 2 கோடி செலவில்!

சேரிகள் சீர்படுத்தப்படுமாம்!

சென்னை, டிச. 24—

வட சென்னையில் ரூ 2,02,56,000 செலவில் 67 சேரிகளைச் சீர்படுத்தவும், துறைமுகப் பகுதியில் நடைபாதையில் வாழ்பவர்களின் வசதிக்காக ரூ. 29·40 இலட்சம் செலவில் இடவசதியும் செய்துதர சென்னை நகரசபை முடிவு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தை சென்னை அரசாங்கத்தின் அனுமதிக்கும் பரிசீலனைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

இட நெருக்கடிக்காக இந்த நிலைமையா?

சென்னை, டிச. 24—

சென்னையிலுள்ள சிறையை நகரின் சுற்றுப்புறங்களுக்கு மாற்றும் திட்டத்தை சென்னை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

சிறையில் சாதாரணமாக 1,457 கைதிகள் வைக்கப்படலாம் என்றும், ஆனல் சிறையில் இட நெருக்கடியின் காரணமாக 2,335 பேர் தற்போது வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை சட்டசபையில் தெரிவித்தார்.

கனரகத் தொழில் நிர்மாணத்தில் தமிழ் நாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது

சட்ட சபையில் கம்யூனிஸ்டுகளுக்கு ஞானோதயம்

குற்றச்சாட்டிற்கு நிதிமந்திரியின் மெய் கலவாத பதில்

சென்னை, டிச 24—

சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம், 'சமத்காரமான' பேச்சுக்களினுல், சின்னுட்களுக்கு முன்புகூட தாம் ஒப்பிய உண்மையை மூடிமறைத்துவிட நினைத்து, பச்சைப் பொய் பேச முற்பட்டிருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

'கனரகத் தொழில்கள் நிறுவுவதில் தமிழ் நாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது,' என்று இடைக்கால வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளித்த நிதி மந்திரி சுப்பிரமணியம், 'இந்தக் கோஷம் தேர்தல் நேரத்தில் வாக்காளரை ஏமாற்ற மேற்கொள்ளப்படும் கோஷம்,' என்றும் பெரியதொரு புளுகுமூட்டையை அவிழ்த்துவிட்டிருக்கிருர்!

முயற்சிக்கிருர்களாம்!

இந்த மாநிலத்தில் எவ்வளவு தொழில்கள் நிறுவமுடியுமோ அவ்வளவு தொழில்கள் நிறுவ மாநில மத்திய சர்க்கார்கள் முயற்சிக்கின்றனவாம்!

ஆனல் தேவையான நிலக்கரி கிடைக்காததுதான் பெரிய கஷ்டமாக இருக்கிறதாம்!

அலுமினியம்தொழிற்சாலை

மேட்டூரில் ஒரு அலுமினியத் தொழிற்சாலை துவக்குவதற்காக சர்க்கார் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது என்றாலும், இது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்றும் மந்திரி கூறினராம்.

கம்யூனிஸ்டுகள் கண் திறப்பு

தொழில்துறை அபிவிருத்தியில் வடவரால் தென்னுடு—தமிழ் நாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற உண்மையைப் பார்க்க இதுகாறும் மறுத்து, கண்களை இறுகமூடிக் கொண்டிருந்த கம்யூனிஸ்டுகள், இப்போது கண் திறந்திருப்பதாகத் தெரிகிறது.

அந்தக் கட்சியைச் சேர்ந்த தோழர் கே. டி. ராஜு, சட்டசபையில் பேசும்போது, 'கனரகத் தொழில் நிர்மாணத்தில் தமிழ் நாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; எனவே, சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை துவக்குவது பற்றி சர்க்கார்திட்டமான அறிவிப்புத் தரவேண்டும்,' என்று கேட்டாராம்!

சோஷலிச மாதிரி சமூக அமைப்பு

பெருமுதலாளிகளுக்கு நியாயமான இடம் உண்டாம்

"சில ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்களேயானல், தனியார் துறையினருக்கு ஒரு நியாயமான இடத்தை சர்க்கார் ஒதுக்கித் தரும்,"

என்று, மத்திய நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, தென்னிந்திய வர்த்தகக் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

'ஒரு சோஷலிச மாதிரிப் பொருளாதார அமைப்பை உருவாக்குவதற்காக எல்லாக் கடுமையான நடவடிக்கைகளையும் சர்க்கார் மேற்கொள்ளும்' என்றும் அவர் கூறினராம்!

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 25—12—'56 செவ்வாய்

தேர்தல் சாகசம்!

★

'ஒரே அளவு பணிக்கு ஒரே அளவு ஊதியம்' என்ற இலட்சியத்தை அடைய முயலல் வேண்டும் என இந்திய அரசியல் சட்டம், காங்கிரசு ஆளவந்தார்கள் மீது ஒரு அறக் கடமையைச் சுமத்தி இருக்கிறது. அது வெறும் அறிவுரையே அல்லாது நடைமுறையில் கொண்டுவந்தாக வேண்டும் என்ற கட்டாயம் அதில் கிடையாது எனக் காங்கிரசு ஆளவந்தார்கள் எண்ணி இருப்பதினாலோ என்னவோ, அரசியல் சட்ட அறக் கடமையை வெறும் 'இதோபதேச'மாகவே விட்டு வைத்து இருக்கிறார்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள அறநெறிக் குறிக்கோளை அடிப்படையாகக்கொண்டு, சமுதாயம் முழுதையும் ஒரே நாளில் திருத்தி அமைப்பது இயலாது என்பதில் நியாயமுண்டு. பொறுப்பற்ற அரசியல்வாதிகள்தான் அந்த நியாயத்தில் உள்ள உண்மையை அறிய மறுக்கக்கூடும். ஆனால், அந்த அறநெறிக் குறிக்கோளை இன்னும் சில ஆண்டுக் காலத்திற்குள் இல்லையாயினும், மேலும் பல ஆண்டுக் காலத்திற்குள்ளாவது முழுசமுதாயமும் அடைந்துவிடக்கூடும் என நம்பும்வகையிலாவது; காங்கிரசு ஆளவந்தார்கள் இன்று செயல்படுகிறார்களா என்றால், அந்தக் கேடும் இல்லை என்றுதான் திட்டமாகக் கூறவேண்டியதாக இருக்கிறது.

அரசியல் சட்டம் குறித்துக் காட்டும் அடைய வேண்டிய இலட்சிய அறநெறி சாரத்தை, சமுதாயத்தின் அடிப்படையாக அமைத்தாக வேண்டுமே என்ற நல்லெண்ணம் காங்கிரசு ஆளவந்தார் அனைவருக்கும் இன்று இருக்கவில்லை என்பது, அவர்கள் செயல் மூலம் தெளிவாகத் தெரிகிறது. இருந்தாலும், அரசாங்க ஊழியர்களுக்குள்ளாகவாவது, 'ஒரே அளவு பணிக்கு ஒரே அளவு ஊதியம்' என்ற உயர்ந்த இலட்சியத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் பெருநெறியை மேற்கொள்ளுவதில், காங்கிரசு ஆளவந்தார்களுக்கு எதுவும் தடையாக இருக்கவில்லை. நிறைவேற்ற முடியாத எதற்கும் கூறிவருவதையே, செயலாற்றக்கூடிய இதற்கும் சமாதானக் காரணமாகக் காட்டுவது, துளியும் பொருந்தாது. அதைச் செய்து முடிக்கவேண்டுமே என்பதில் தங்களுக்கு இருந்துவரும் பற்றற்றதன்மையை மறைத்துக் கொள்வதற்குப் பேசப்பட்டுவரும் ஒரு புகலாகத்தான், இதற்கும் காங்கிரசு ஆளவந்தார்கள் கூறும் சமாதானத்தை அறிவுடையவர் கொள்ளுவர்.

ஒரே அளவு பணியை இந்தியப் பேரரசின் ஊழியராக இருந்து செய்துவரும்பொழுது கூடிய ஊதியமும், அதே பணியை சென்னை அரசாங்க ஊழியராக இருந்து ஆற்றிவரும்பொழுது குறைந்த ஊதியமும் பெறுகின்ற அவலநிலை இப்பொழுது இருந்துவருகிறது. ஒரேவகை பணிக்கு பெறப்படும் ஊதியத்தில் இருந்துவரும் இந்த உயர்வு தாழ்வு அநீதியானது என்று சொல்லத் தேவை இல்லை.

இந்த உயர்வு தாழ்வு அக்கிரமத்தை, இத்தீய முறையினால் பாதிக்கப்படுகிறவர்கள் தாமாகவே முன்வந்து பரிகாரம் கோருவதற்கு முன்னரே ஒழித்துக்கட்ட காங்கிரசு ஆளவந்தார்கள் தம்மிச்சையாக முன்வந்திருக்க வேண்டும்.

அறநெறிக்குக் கட்டுப்பட்டு ஆட்சி நடத்துகிறவர்களாக காங்கிரசு ஆளவந்தார்கள் இருந்திருப்பார்களானால், மேற்படி தீமையை ஒழிப்பதைத்தான் முதற்கண் செய்தாக வேண்டிய பணியாகக் கொண்டு இதற்குள் ஒழித்திருப்பர். ஆனால் அவர்களோ, பாதிக்கப்பட்டவர்கள் தொழிற்சங்கத்தினர் போன்று, நேரடியாக நடவடிக்கையில் இறங்கிய பின்னரும் மேற்படி ஊதிய உயர்வு தாழ்வு அநீதியைத் துடைக்கத் துணிந்து முன்வர மறுக்கின்றனர்.

பல ஆண்டுக்காலமாக மேற்படி அநீதிக்கு ஆளாகி அவதிப்பட்டுக்கொண்டு இருக்கும் சென்னை அரசாங்க ஊழியர்கள், தொடர்புடைய சென்னை அரசாங்கத்தைப் பரிகாரம் கோரினால், இந்த அமைச்சரவையோ, பற்றாக்குறையான நிதி நிலைமையைக் காட்டி, அநீதிக்குப் பல்லாண்டு கூறுகிறது. அரசாங்க ஊழியர்களைப் பார்த்து கொஞ்சுகிறது ஒரு கணம்—கெஞ்சுகிறது மற்றொரு கணம் — இயல்புப்படி மிஞ்சிடவும் செய்கிறது வேறு ஒரு கணம்!

சென்னை அரசாங்க ஊழியர்களுக்கும், இந்தியப் பேரரசின் ஊழியர்களுக்கும் இடையில் இருந்துவரும் ஊழிய உயர்வு தாழ்வு ஒருபக்கம் இருக்க, சென்னை அரசாங்க ஊழியர்கள் பெற்றுவரும் ஊதியம், குறைந்தபட்ச வாழ்க்கைச் செலவையும் ஈடு செய்யக் கூடியதாக இல்லை. இந்த உண்மையை காங்கிரசு அமைச்சர்களும், நம்மைவிட மிக நன்றாக சுய அனுபவவாயிலாக அறிந்தே இருக்கின்றனர்.

அரசாங்க ஊழியர்கள் பெற்றுவரும் ஊதியத்தைக் கொண்டு குறைந்தபட்ச வாழ்க்கைச் செலவையும் சரிகட்ட முடியாதத் துன்பம் ஒரு பக்கம் இருக்க, அவர்கள் செய்ய வேண்டிய பணியின் சுமையும் நாளுக்குநாள் கூடிக் கொண்டும்போகிறது. எனவே மிகுதியான பணியின் காரணமாக, நமது அரசாங்க ஊழியர்களின் துன்பமும் துயரமும் முன்னிலும் சில மடங்கு கூடுதலாகியும் உள்ளன.

காங்கிரசு அமைச்சரவையின் 'கைவிரிப்பு' கதை அளப்பைக் கண்டு, நமது அரசாங்க ஊழியர்கள் எரிச்சலடைந்திருக்கிறார்கள்; அளவுகடந்த அதிருப்தியும் கொண்டுள்ளார்கள்.

இவ்வுண்மையைத் தெரிந்த காங்கிரசு அமைச்சரவை, தேர்தல் நேரத்தில் அரசாங்க ஊழியர்களிடை அதிருப்தி இருந்துவருவது தங்களுக்கு விரோதமாக முடிந்துவிடக் கூடுமே என்ற அச்சத்தின் காரணமாக, ஐந்து ரூபாய் கொடுத்து உதவப் போவதாக இப்பொழுது அறிவித்துள்ளது. அச்சிறு தொகை உயர்வுக்கே இரண்டு கோடி ரூபாய் செலவாகுமே என்று முகாரியும் பாடி வருகிறது அமைச்சரவை.

இந்தச் சூழ்நிலையில் இந்தியப் பேரரசின் நிதி அமைச்சராக இருந்துவரும் டி. டி. கிருட்டிணமாச்சாரியார் அவர்கள், நூறு ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறுகிற அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் ஒத்த நிலையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 12 வீதம் ஊதிய உயர்வு தர சென்னை முன்வருமானால், இந்தியப் பேரரசு நிதி உதவும் என்று ஆசை மொழி கூறியுள்ளார்.

அவர் ஆசைமொழி, நிறைவேற்றப்பட வேண்டுமே என்ற நல்லெண்ணத்துடன் கூறப்பட்டதா அல்லது அதுவும் தேர்தல் சாகசமா என்பது தெரியவில்லை.

சென்னை அரசாங்க ஊழியர்களின் தூதுக்குழு, இந்தியப் பிரதமரைச் சந்தித்து, குறைகளைக் கோர டில்லி சென்றது. அப்பெருமகனோ, தூதுக்குழுவைக் காணவும் முடியாது என முரட்டுத்தனமாகக் கூறிவிட்டார்.

சென்னை அரசாங்க ஊழியர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை சென்னை அரசாங்கத்தைப் பொருத்துள்ள விவகாரம்; இந்தியப் பேரரசு அதில் தலையிடுவதற்கு நியாயமில்லை; என்று பிரதமரின் கட்டளைத் தம்பிரான் வெட்டு ஒன்று-துண்டு இரண்டு எனக் கூறியும்விட்டார்.

இரண்டொரு திங்களுக்கு முன் மறுத்துக் கூறிய அதே இந்தியப் பேரரசின் சார்பில்தான், அதில் நிதி அமைச்சராக இருந்துவரும் ஒருவர்தான், இப்பொழுது, இந்தியப் பேரரசு நிதி உதவும் என, ஆசை மொழி கூறக் கிளம்பி இருக்கிறார். இதை சென்னை அரசாங்க ஊழியர்கள் நம்புவார்களா? இதுபற்றி ஆரூடம் கூற நமக்குத் தெரியாது.

ஆனால், நிதி அமைச்சரின் ஆசைமொழி கடைந்தெடுத்தத் தேர்தல் சாகசம் என்ற உண்மையை நம்மைப் போன்றே அரசாங்க ஊழியர்களும் அறிந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

மரண தண்டனையை ஒழிக்க இயலாதாம்

சென்னை, டிச. 24—

1954—55-ல் விசாரணைக்கு வந்த கொலை வழக்குகள் எண்ணிக்கை 654 என்றும், அதில் 117 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதென்றும், 1955—56-ல் 648 கொலை வழக்குகள் விசாரிக்கப்பட்டதென்றும், 129 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில், மரண தண்டனையை ஒழித்துக் கட்டும் ஆலோசனை எதும் இல்லையென்றும் கூறியுள்ளார்.

'ஓட்டு' கேட்டு வருபவர்களிடம்.....!

சாதி-குலம்-கோத்திர விசாரணை வேண்டாம்

எவருக்கு வாக்களிப்பது என்பதைச் சிந்திக்க வேண்டும்

தவறு இழைத்தால் நாடு அழிந்துபடும்

வாக்காளர் பெருமக்களுக்கு அண்ணா வேண்டுகோள்

"தேர்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் தோழர்களும், வாக்காளர் பெருமக்களும், தேர்தலில் நிற்கிறவர்களைப்பற்றி—அவர்கள் சாதி என்ன, குலம் கோத்திரம் என்னவென்றெல்லாம் பார்க்காமல், அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்—அவர் சார்ந்துள்ள கட்சியின் நோக்கம் என்ன—அந்தக் கட்சி இதற்குமுன் ஆண்ட கட்சியாக இருந்தால் எப்படி ஆட்சி நடத்தியது—இதற்குமுன் ஆளாத கட்சியாக இருந்தால், ஆளும் ஆற்றல்-தகுதி படைத்ததா என்பவைகளைக் கவனித்தே ஓட்டுப் போட வேண்டுகிறேன்.

"மக்கள் இப்படிச் செய்யாவிட்டால், அஸ்திவாரமில்லாத கட்டிடம் இடிந்துவிழுகிற நிலைதான் நாட்டுக்கு ஏற்படும். நாங்கள் கேட்பது, 'எங்களுக்கே உங்கள் ஓட்டுக்களைப் போடுங்கள்' என்பதுகூட முக்கியமல்ல; யார் யாருக்கு ஓட்டுப் போட வேண்டுமென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதுதான்"

—என்று அண்ணா அவர்கள், சென்னை-கீழ்ப்பாக்கம் 22-வது வட்ட தி. மு. கழக 4-வது ஆண்டு விழாவில் பேருரையாற்றுகையில், வாக்காளர் பெருமக்களை வேண்டிக்கொண்டார்; அவரது சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; இறுதி பகுதி இங்கு தரப்படுகிறது:—

அதிர்வேட்டு!

"இது தேர்தல் காலம்! இத்தேர்தல் காலத்தில் சாதாரண அரசியல் கட்சிகள் மட்டுமல்ல—ஓட்டுரிமை பெற்றுள்ள மக்கள் அனைவரும் தீவிரமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய காலம்!

"தேர் திருவிழாக் காலங்களில் கோயிலுக்குள் அதிர்வேட்டுக்கள் வெடிக்கப்பட்டால், அந்தச் சத்தம் கேட்டுத் தொட்டிலில் படுத்துறங்கும் குழந்தை திடுக்கிட்டுவிடப் போகிறதோ என்று பயந்து, அதனிடம் தாய் ஓடிச் செல்வாள். அந்த அதிர்வேட்டுச் சத்தம் கோயிலில் இருந்து கிளம்புகிறதென்பது மற்றவர்களுக்குத் தெரியும்; தாய்க்குத் தெரியும்; ஆனால், குழந்தைக்குத் தெரியாது. பக்கத்திலேயே வெடித்தது போல் சத்தம் கேட்டு, அதனால் ஏற்பட்ட பயத்தால் குழந்தை அழுதால் அதற்குக் குலைநோய் ஏற்படும் என்று தாய் அறிவாள். எனவே, 'இது கோயிலிலே போட்ட வேட்டுச் சத்தம்; உனக்கொன்றுமில்லை; நீ தூங்கு' என்று தாய் சொல்லுவாள்.

"கோயில் வெடி வெடித்ததற்கும், தொட்டில் குழந்தையைத் தாய் தேற்றுவதற்குமே இவ்வளவு தொடர்பு இருக்கும்போது, அடுத்த 5 வருடங்களுக்கு இந்நாட்டின் நிர்வாகப் பொறுப்பில் யார் இருப்பது என்ற வாழ்வுப் பிரச்சினைக்கும் நாட்டு மக்களுக்கும் எவ்வளவு தொடர்பு இருக்க வேண்டும்? எனவே, தேர்தலை எவரும் அலட்சியப்படுத்திவிடக் கூடாது.

அக்கரை தேர்தலில் மட்டுமா?

"திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் மட்டும் அக்கரை செலுத்திக் கொண்டிருக்கவில்லை. உங்கள் அனைவரின் ஆதரவுடனும் அது ஈடுபட்டுள்ள அரிய பணிகளில் ஒன்றாகக் கருதுகிறது.

"தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடுவதென்றால், நான் முன் கூறினபடி, கோவில் வெடி கேட்டதும் தொட்டிலுக்கருகில் தாய் செல்வது போல் தேர்தல் வெடி நாட்டிலே கேட்டதும் நாங்கள், மக்களாகிய உங்களிடத்திலே வருகிறோம்.

"நாட்டின் இன்றைய நிலை இப்படி இப்படி இருக்கிறது; நிலம் ஏழை விவசாயிகளுக்கும் பங்கிட்டுத் தரப்படவேண்டும்; 5 ஆண்டுக் காலத்திற்கு நாடு இப்படி இருக்க வேண்டும்; உங்கள் தீர்ப்பென்ன?—என்றுகேட்கத்தான் திராவிடமுன்னேற்றக் கழகம் மக்களை அணுகுகிறது. தேர்தல் நடைபெறுகிற அந்த 4 நாட்களிலே நீங்கள் நிறைவேற்றும் காரியம், 5 ஆண்டுக் காலத்திற்கு நம் நாட்டின் எதிர்கால நல்வாழ்வை நிர்ணயிப்பதாக அமையும்.

ஒரு பலமான அஸ்திவாரம்

"ஒரு வீடு கட்டுவதாக இருந்தால் முதலில் அஸ்திவாரம் தோண்டுவார்கள்; தோண்டப்படுகிற அந்த அஸ்திவாரத்தின் ஆழம், எப்படி எப்படிக் கட்டிடம் கட்டவேண்டும் என்று திட்டமிடப்பட்டதோ அதற்கிணங்க அமைந்திருக்கும். ஓட்டு வீடு ஒன்று கட்டுவதாக இருந்தால் அதற்கு ஒரு முழம் ஆழத்திற்கு அஸ்திவாரம் போதும் என்று கூறுவார்கள். சென்னையிலே அண்மையில் ஒரு பெரிய கட்டிடம் கட்டப்பட்டு வருவதை சென்னை நகரவாசிகள் அறிந்திருப்பார்கள். அந்தக் கட்டிடத்திற்கான அஸ்திவாரம் தோண்டும் வேலையே $1\frac{1}{2}$ வருடம் நடந்தது! உள்ளே நடைபெறும் வேலை வெளியே தெரியக்கூடாதென்பதற்காக வேலி போட்டு மறைத்து, பகல் இரவென்று பாராமல் வேலைசெய்து, மின்சாரத்தின் உதவியால் ஆழமாக அஸ்திவாரம் தோண்டியிருக்கிறார்கள். இந்த அஸ்திவாரம் தோண்டுவதற்கு மட்டும் செலவழிக்கப்பட்ட பணம் $6\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் என்று தெரிகிறது. $6\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவு செய்து, இந்த அஸ்திவாரம் போடுவதற்கான காரணம் என்னவென்றால், எழுப்பும் கட்டிடம் பல மாடிகளைக் கொண்டது! அஸ்திவாரச் செலவு மட்டும் ரூ. $6\frac{1}{2}$ இலட்சம் என்றால், கட்டிடச் செலவு மட்டும் ஏறத்தாழ 1 கோடி ரூபாய் ஆகும்.

"இந்தக் கட்டிடத்திற்கும் சாதாரண வீட்டுக்குத் தோண்டுவது போலவே அஸ்திவாரம் போட்டால் பல மாடிகள் எழும்பாது; இரண்டாவது மாடி போட்டுக் கொண்டிருக்கும்போதே, மாடி இடிந்துவிழும்; கீழே நின்று வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளியும் மாண்டுபோவான். எனவே, அஸ்திவாரம் எவ்வளவு ஆழமாகவும் பலமாகவும் இருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் அதிலிருந்து எழும்பும் கட்டிடமும். அரசியல் துறையில் எழுப்பப்படும் அஸ்திவாரமும் இப்படியேதான் பலமாக இருக்கவேண்டும்.

கொதிக்கும் குழம்பும்......

"தேர்தல் காலங்களில் நாம் காணலாம்—தேர்தலுக்கு நிற்பவர்கள் வீடு வீடாகச் சென்று, 'வாருங்

(3-ம் பக்கம் பார்க்க)

வர்த்தகக் கோட்டத்தில் கழக முழக்கம்

28-வது வட்ட கூட்டத்தில் அண்ணு

தேர்தல் நிதிக்கு ரூ. 691-3-0 அளிக்கப்பட்டது

சென்னை 28-வது வட்டம் பூங்கா நகர் தி மு க. தேர்தல் நிதியளிப்புப் பொதுக்கூட்டம் நேற்று மாலை 6-30 மணியளவில், வர்த்தகக் கோட்டமான அந்தப் பேட்டையில் உள்ள இராசப்பச் செட்டி தெருவில் சிறப்புற நடைபெற்றது

கூட்டத்திற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து, அண்ணு அவர்களது கருத்துரை கேட்டுப் பயன் பெற்றனர்.

கூட்டத்தில் அண்ணு அவர்களிடம் தேர்தல் நிதியாக ரூ 691 (விபரங்கள் வழக்கம்போல் வெளிவரும்.) அளிக்கப்பட்டது.

தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள், கூடியிருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது :—

"இந்தப் பேட்டையில் நடைபெறும் கழகக் கூட்டம் இதுவே முதல் கூட்டம் என்றாலும், கழகம் இப்போது ஏற்பட்டது அல்ல என்பதை மக்கள் அறிவர்.

"இந்தப் பேட்டையிலிருப்பவர்கள் பெரும்பாலும் வியாபாரிகள்; அவர்களிலே பெரும்பாலானவர்கள் பக்திமான்கள்.

"இந்தப் பேட்டை வாசிகளாயிருக்கும் வர்த்தகர்களும், வர்த்தகத் தொழிலாளர்களும், தாமுண்டு—தமது தொழில், வேலை, வீடு உண்டு—என்ற போக்கிலிருப்பவர்கள்; அரசியலில் அதிகம் அக்கறை காட்டாதவர்கள்; ஆனாலும், அவர்கள் இப்போது அரசியலில் அக்கறை காட்டவேண்டிய அவசியம் பிறந்திருக்கிறது.

"இந்த வட்டார வர்த்தகர்கள், தணிகாசலம் செட்டியார் என்ற ஒரு மாபெரும் நீதிக் கட்சித் தலைவரை அறியாமலிருக்க முடியாது. தியாகராய நகரில், அந்த வர்த்தகக் குல மாணிக்கமாக விளங்கிய தணிகாசலம் பெயரால் உள்ள சாலையைத் தமது பெயரால் மாற்றி அமைக்கவேண்டும் என்று, மேயராக இருந்த காலத்தில் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அவர்கள் முயற்சித்ததையும், அந்த முயற்சியை முறியடிக்க இந்த வட்டார மக்கள் கிளர்ந்தெழுந்து போராடி வெற்றி பெற்றதையும் இந்த வட்டார மக்கள் மறந்திருக்க முடியாது

"அந்தத் தணிகாசலம் போன்ற மாபெரும் தலைவர்களால் நடத்திச் செல்லப்பட்ட இயக்கம் தான், இன்று தி. மு கழகமாக நாட்டில் உலவுகிறது என்பதையும் இந்த வட்டார மக்களுக்கு நான் கூற விரும்புகிறேன்

'எனவே, இங்குள்ள மக்கள் கழகத்திற்கு எல்லாவகையான ஆதரவும் தரவேண்டுமென தாங்கள் கேட்பதற்கு எல்லா உரிமைகளும் உடையவர்கள் நாங்கள்," என்று குறிப்பிட்டார்.

அவர் முன் மொழிந்ததை ஒட்டி, தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கூட்டத் துவக்கத்தில் மன்னார்குடி தோழர் சுந்தரேசன் இயக்கப் பாடல்கள் பாடினர்.

தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன், மாணவி சற்குணம் ஆகியோர் சிறிது நேரம் பேசினர்.

பின்னர், தோழர் போளூர்-கே. சுப்பிரமணியம் அவர்கள், காங்கிரஸ் கட்சியில் வர்த்தகப் பெருமக்கள் அனுபவித்து வரும் தொல்லைகளை-தான் ஒரு வியாபாரி என்ற முறையில் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு விளக்கிக்காட்டி, தொல்லைகள் நீங்கி, நேரிய நிர்வாகம் நடத்தும் ஒரு ஆட்சி அமைய தி. மு க.-விற்கு வர்த்தகர்கள் ஆதரவு தரக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்று எடுத்துரைத்தார்.

அடுத்து, தோழர் எம். பி சுப்பிரமணியம் எம். எல். ஏ. அவர்கள், சர்க்காரின் இந்த ஆண்டு 'பட்ஜெட்' பற்றியும், நிகழ்கால அரசியல் நிலைகுறித்தும் அரியதொரு கருத்து விளக்கமளித்தார்.

அடுத்தாற்போல் அண்ணு அவர்கள் பேசஎழுந்ததும், பெரும் ஆரவாரப் பேரொலிக்கிடையே பல்வேறு மன்றங்கள் கழகங்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன,

தேர்தல் நிதியாக !

28-வது வட்டத் தி. மு. கழகம் ரூ. 142-0-0 (உண்டியல் ரூ. 37-0-0 உட்பட); தோழியர் வள்ளியம்மாள் ரூ. 501-0-0 இராசப்பசெட்டி தெரு காய்கறிக்கடை புதுவை சாரங்கபாணி ரூ. 10; 28-வது வட்டத் தி. மு. கழக அனுதாபிகள் ரூ. 37-3-0; அரக்கோணம் (அசால்பேட்டை) அழகிரி நாடக மன்றம் ரூ 1— ஆக ரூ. 691-3-0 அண்ணு அவர்களிடம் அளிக்கப்பட்டது.

பின்னர், அண்ணு அவர்கள் தேர்தலில் கழகம் ஈடுபடுவது குறித்தும், இந்த நாட்டுக்கு நமக்கென்று ஒரு துரைத்தனம் இல்லாதிருப்பதால் விளையும் அவலங்கள் குறித்தும், கழகம் தேர்தலில் வெற்றி பெற மக்கள் ஆதரவு நல்க வேண்டியதின் அவசியங்குறித்தும், மிகச் சிறப்பானதோர் கருத்துரை வழங்கினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின், தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது

வாக்காளருக்கு அண்ணு வேண்டுகோள்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள், வாருங்கள்; ஓட்டுப் போட வாருங்கள்' என்று அழைப்பார்கள்.

"வீட்டு அடுப்பில் அப்போது தான் குழம்பு கொதித்துக்கொண்டிருக்கும்; அந்த நேரத்தில், அவசர அவசரமாகப் புறப்பட்டு ஓட்டு போடப் பெண்கள் வண்டிகளில் ஏறும்போது, யாராவது அருகில் நின்றுகொண்டு, 'யாருக்கு ஓட்டுப் போடுவீர்கள் ?' என்று கேட்டால், அவர்கள், 'யாராவது ஒருவருக்கு—ஏதாவது ஒரு பெட்டியில் போட்டுவருகிறேன்; அடுப்பில் குழம்பு வைத்திருக்கிறேன் கொஞ்சம் பார்த்துக்கொள்' என்று சொல்வார்கள்.

"இப்படி இந்தத் தேர்தலிலும் இருந்தால் நிச்சயம் அரசியல் வாழாது. தேர்தலில் யாருக்கு ஓட்டு போடுவது என்பதைவிட, குழம்பு கொதிப்பதைத்தான் முக்கியமாக எண்ணுவார்கள்.

"ஆனால், வீட்டில் குழம்பு கொதிப்பது எவ்வளவு முக்கியமோ அதுபோல் 5 வருட காலத்திற்கு நமது குடும்பமும் வாழவேண்டும். இதைத் தாய்மார்கள் இந்தத் தேர்தலில் உணர வேண்டுகிறேன்.

தேர்தலில் நிறுத்தப்பட்டோம்

"போன தேர்தலில் நீங்கள் அஜாக்கிரதையாக இருந்துவிட்டீர்கள்; ஆனால், இந்தத் தேர்தலில் அதிக அக்கறையுடன் பணியாற்ற மக்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏன் இந்தத் தேர்தலில் அதிக அக்கறை காட்டச் சொல்கிறேன்? இந்தத் தேர்தலில் நாங்கள் ஈடுபட்டிருப்பதால்! ஏன் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம்? நீங்கள் எங்களைத் தேர்தலில் ஈடுபடச் சொன்னதால்! எப்போது? அண்மையில் நடைபெற்ற மாநில மாநாட்டில்தான் சொன்னீர்கள். அந்த மாநாட்டிலே பொதுமக்களைப் பார்த்து, 'நாங்கள் பொதுத் தேர்தலிலே நிற்பதா வேண்டாமா?' என்றுகூட நாங்கள் கேட்கவில்லை. நாவலர் நெடுஞ்செழியனும், நண்பர் நடராசன அவர்களும்கூட என்னிடம் கேட்டார்கள்—'யாராவது, நாம் தேர்தலில் போட்டியிடுவது என்பதைப் பற்றிப் பேசவேண்டாமா ?—என்று! அப்போது நான், 'வேண்டாம்' என்று சொன்னேன்; ஏன்? நமது பொதுச்செயலாளர் அவர்களோ, தோழர் கருணாநிதி அவர்களோ, மற்றவர்களோ இது பற்றிப் பேசுவதைக் கேட்டதும், 'அவர்களுடைய பேச்சுக்காகவே ஓட்டுப் போட்டுவிட்டனர்,' என்று பின்னால் மாற்றுக் கட்சியினர் நம் மீது பழிசுமத்துவார்கள்; அதனால், 'வேண்டாம்' என்றேன். 'அவர்களாகவே சிந்தித்து அவர்களாகவே நம்மை தேர்தலில் நில்லுங்கள் என்று சொன்னால் நாம் நிற்போம்; இல்லையென்றால் வேண்டாம்,' என்று கூறினேன். உண்மையிலேயே, அந்த மாநாட்டில், 'வேண்டும்—வேண்டாம்' என்ற சீட்டுகளைப் போடுவதற்கென வைக்கப்பட்டிருந்த அந்த இரண்டு பெட்டிகளையுமே, அதில் விழுந்த சீட்டுகளையெல்லாம் எண்ணின பிறகுதான் நான் பார்த்தேன்; அதுபோலவேதான் நமது நாவலரும், நண்பர் நடராசனும்! இப்படி நீங்களாகவே சொல்லி நிறுத்திவைக்கப்பட்ட நாங்கள், தேர்தலில் தோற்றால் யாருக்கு அவமானம்?

நான் வெட்கப்படுவதில்லை

"பொதுவாகவே நான் அதிகமாக வெட்கப்படுவதில்லை. என்னோடு நெருங்கிப் பழகும் சில நண்பர்கள்கூட என்னைச் 'சொரணையற்றவன்' என்றுதான் சில சமயங்களில் சொல்லுகிறார்கள். ஆனால், நான் எதற்கும் வெட்கப்படாமலிருப்பதற்குச் சில காரணங்கள் உண்டு.

"நான் வெட்கப்படாமலிருப்பதனாலேயே நான் சொரணையற்றவன் என்பதல்ல பொருள்! மனிதனுக்குக் கோபமும் சொரணையும் இல்லை என்பதல்ல; மாட்டுக்குக்கூடக் கோபமும் சொரணையும் இருக்கும்போது, மனிதனுக்கா இராது? ஆனால் நான் வெட்கப்படாததற்குக் காரணம் என்னிடத்திலே உள்ள சுபாவம்தான்!

"நான் எல்லாக் கட்சியினரையுமே நேசிக்கத்தான் விரும்புகிறேன்! யாரையும் விரோதித்துக்கொள்ள நான் விரும்பவில்லை. அதற்குக் காரணம்? இன்று மற்றக் கட்சியிலிருக்கும் எத்தனை நண்பர்கள் நாளைக்கு நமது கட்சியிலேயே வந்து சேரப்போகிறார்களோ—யார் கண்டார்கள் ?

"இந்தக் காரணத்தினால்தான் நான், என்னை யார் திட்டினாலும் கூட அதைப் பொருட்படுத்தமாட்டேன். இந்தப் பாடத்தை நான் கற்றுக்கொண்டது பெரியார் இராமசாமி அவர்களிடமிருந்து!

பெரியாரிடம் பாடம் பெற்ற முறை!

அப்படி நான் கற்றுக்கொண்ட முறை இரண்டு; ஒன்று—ஏகலைவன் துரோணச்சாரியிடம் வித்தை கற்றுக்கொண்டது போன்றது. துரோணச்சாரியார் தனக்கு வித்தை கற்றுக் கொடுக்க மறுத்து விட்டபோதிலும் கூட, அவரது பொம்மை ஒன்றை வைத்துக் கொண்டே வித்தையைக் கற்றுக்கொண்டான் ஏகலைவன். அதற்குப்பிறகு அவன் கட்டைவிரலை வெட்டிக் கொண்ட கதைக்கு நான் போகவில்லை. இப்படி, பெரியார் அவர்கள் சொல்லாமலேயே சில பாடங்களை நான் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

'எந்த மாற்றுக் கட்சியினர் நம்மைத் திட்டினாலும் நாம் கோபம் கொள்ளக்கூடாது என்ற பாடத்தை நான் எப்படிக் கற்றுக் கொண்டேன்? அவரை எத்தனை எத்தனை மாற்றுக்கட்சியினர் எப்படி யெல்லாம் திட்டினார்கள்? அவற்றையெல்லாம் அவர் தாங்கிக் கொண்டார். அந்த நேரத்திலெல்லாம் நானும் அவர் கூடவே பக்கத்தில் இருந்திருக்கிறேனே?

நாமும் அறிவோம், ஆனால்........

"நான் தவறுமல் நம்முடைய கம்யூனிஸ்டு நண்பர்கள் 'ஜனசக்தி'யில் நம்மைப்பற்றி எழுதிவருவதை நாம் பார்க்காமலா இருக்கிறோம்? இதையெல்லாம் பார்த்தும் நாம் ஏன் சும்மா இருக்கவேண்டும்? நமக்கும் என்ன எழுதத் தெரியாதா? நமக்குப் பேனு கிடையாதா? எழுதப் பத்திரிகை இல்லையா? நம்மாலும் முடியும் ஆனால் அதைச் செய்யாமலிருப்பதற்குக் காரணம், நம்மீது சுமத்தப்பட்டிருக்கிற பொறுப்பு வரவர அதிகமாகிக்கொண்டே வருவதுதான். பொறுப்பு அதிகமாகிக் கொண்டே வருவதற்குக் காரணம் நீங்கள் ஏராளமாக வளர்கிறீர்கள் என்பது தான். அப்படி வளர்ந்துள்ள உங்களை இந்தச் சிறு சிறு காரியங்களுக்கெல்லாம் ஈடுபடுத்தினால், உங்கள் உழைப்பு அத்தனையும் பாழாகிவிடும் என்பதை நான் அறிவேன்.

"4 வயது பையன் குளித்துவிட்டுக் கோவணம்கட்டாமலேயே தாயிடம் வந்து சட்டைபோடச்சொல்லலாம்; யாரும் அவனைக் கோபித்துக் கொள்ளமாட்டார்கள். ஆனல் 18 வயது இளைஞன், குளிக்கும்போது அறையைக்கூட அல்லவா மூடிக்கொண்டு குளிக்கவேண்டும்?

"நம்மைத் திட்டுவோர் திட்டட்டும்; அதற்காக நமது தோழர்கள் யாரும் ஆத்திரம் கொள்ளவேண்டாம்."

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கட்கு

★

துறையூர் ஊராட்சி மன்ற வரவேற்பு

17—12—56 பிற்பகல் 2-30 மணிக்கு துறையூர் ஊராட்சி மன்றத்தாரால் ஜெயலட்சுமி டாக்கீசில் தி மு. கழகப் பொதுச்செயலாளர் அவர்களுக்கும், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கும் சிறந்த சிற்றுண்டி அளிக்கப்பட்டது.

பின் ஊராட்சி மன்ற அலுவலகத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு மன்றத் தலைவர் டி. என். மாணிக்கம் அவர்களால் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

பொதுச்செயலாளர் அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு, ஊராட்சி மன்றத்தின் தலைவர், உறுப்பினர் கடமை பற்றியும், ஆட்சியாளர் கடமை பற்றியும் நல்ல கருத்துரை வழங்கினர்.

தேர்தலில் போட்டியிட உள்ளூர் காங்கிரசில் ஆள் பஞ்சமா ?

திருக்கோவிலூர் பஞ்சாயத்து குமுறல்

திருக்கோவிலூர், டிச. 24—

இவ்வூர் சட்டசபைத் தொகுதிக்கு உள்ளூர் காங்கிரசாரை விடுத்து, வெளியூரிலிருந்து ஆள தேட மேலிடம் முயற்சிப்பதற்கு, உள்ளூர் பஞ்சாயத்து சபை எதிர்ப்பு தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

மாவட்ட காங்கிரஸ் உறுப்பினரான நந்தகோபால் (செட்டியார்) என்பார், திருக்கோவிலூர் சட்டசபைத் தொகுதிக்கு, உள்ளூர் காங்கிரசிலிருந்து எவரையும் தேர்ந்தெடுக்காமல், மேலிடம் வெளியூரிலிருந்து ஒரு அபேட்சகரைத் தேர்ந்தெடுப்பதற்குக் கண்டனம் தெரிவிப்பதற்காகப் பஞ்சாயத்து சபையின் கூட்டத்தை நடத்துமாறு கோரியிருந்ததற்கு ஒப்ப, கடந்த 21—12—56 அன்று மாலை, பஞ்சாயத்தின் அவசரக் கூட்டம் ஒன்று நடைபெற்றதாம்

அந்தக் கூட்டத்தில் மேலிடத்தின் போக்கைக் கண்டித்தும், உள்ளூர்வாசியையே அபேட்சகராக்க வேண்டும் என்று கோரியும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

இந்தத் தீர்மானம், டில்லி காங்கிரஸ் மேலிடத்திற்கும், மாநில காங்கிரசிற்கும் அனுப்பப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலிடப் போக்கு உள்ளூர் காங்கிரசாரிடை மிக்க மனவேதனையை உண்டுபண்ணி இருப்பதாகத் தெரியவருகிறது. (ஒ. நி.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

★

தி. மு கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ்ப்பாதி சிவப்பு) பொறிக்கப்பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே 'தி மு க' என்ற எழுத்துக்களும், கீழே 'வருக! வெற்றி தருக!' என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும், கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

வில்லையின் விலை அணு 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது வெளியூர்க்கிளைகள் 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அவ்வளவுக்குரிய தொகையை முன்கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பிவைக்கப்பெறும்.

'அறிவகம்' சென்னை
24—12—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

5,000 ஆசிரியர்களில் ஒருவர்கூட தமிழர் இல்லை!

பண்டா சர்க்காரின் இன வெறிப்போக்கு!

அரசாங்கக் கல்லூரிகளில் 5,000 ஆசிரியர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்கவேண்டும் என கல்வி அமைச்சர் திரு. தகநாயகா ஒரு உத்தரவை பிறப்பித்துள்ளார். அந்த உத்தரவில் 5000 பேரில் ஒரு தமிழ் பேசும் ஆசிரியரின் பெயரும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களிடையேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க அரசாங்கம் எதும் செய்யாதென்றும், அதற்கு மாருகச் சிங்கள மக்களிடை காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பது குறித்தே அது கவனம் செலுத்தத் தீர்மானித்திருக்கிறதென்றும் தெளிவாகிவிட்டது.

ஏற்கனவே பயிற்சியளிக்கப்பட்டு வேலையின்றித் திண்டாடும் தமிழ் ஆசிரியர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே இருக்கும். அத்துடன் இனித் தமிழாசிரியர்களாகப் பயிற்றப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் என்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

சட்டசபை முன் பீடித் தொழிலாளர் போராட்டம்

240 பேர் கைது

சென்னை, டிச. 24—

சென்னை சட்டசபைமுன் நடைபெற்றுவரும் பீடித் தொழிலாளர்களின் போராட்டத்தில் இதுவரையில் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 240 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம்

சென்னை, டிச. 24—

மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு சென்னை அரசாங்கம் அனுமதித்திருப்பதாக அமைச்சர் பக்தவத்சலம் சென்னை மேல்சபையில் கூறியுள்ளார்.

தாழ்த்தப்பட்ட மகளிர் தங்குவதற்கு விடுதிகள்

சென்னை, டிச 24—

சேலத்தில் கிருஷ்ணகிரியிலும், திருச்சியில் புதுக்கோட்டையிலும், மதுரை, திருப்பூர், மாயூரம், காரைக்குடி ஆகிய இடங்களிலும் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு ஆறு விடுதிகள் ஆரம்பிக்க சென்னை அரசாங்கம் சம்மதித்திருக்கிறதாம்.

இந்த விடுதியில் 200 பெண்கள் தங்குவதற்கு வசதியளிக்கப்படுமாம்.

அடுத்த ஆண்டு முதல்!

தென் கிழக்கு ஆசிய கலாச்சாரத்தைக் கற்றறிய சென்னை பல்கலைக் கழகத்தில் அடுத்த ஆண்டு முதல் ஒரு நிரந்தரக் கழகம் அமைக்கப்படும்; இதற்கான உதவியை ஐ. நா. கலாச்சார, கல்வி நிறுவனம் அளிக்கும்.

சட்டம் விரிவாகிறது

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோவில்களை அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவருவதற்குச் சட்டம் விரிவுபடுத்தப்படுமாம்.

போலீசாருக்கு இடவசதி

சென்னை நகரத்திலும், மற்றும் வெளியூர்களிலுமுள்ள போலீசாருக்கு வீடுகள் கட்டித்தர ரூ. 39,96,800 சென்னை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாம்.

ரூ. 5 இலட்சம் செலவில் விடுதி கட்டப்படுமாம்!

கோவையிலுள்ள அரசாங்கக் கலா விஞ்ஞானக் கல்லூரிக்கு ரூ. 5 லட்சம் செலவில் விடுதி ஒன்றை கட்டுவதற்கு சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

அதிசயமே அதிசயம்!

சென்னை, டிச. 25—

தற்போது சென்னை சட்டசபையில் 190 உறுப்பினர் உள்ளனர்.

நேற்று நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்திற்கு மக்கள் பிரதிநிதிகள் 19 பேர்களே வந்திருந்தனராம்.

'கூட்டம் நடத்துவதற்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச உறுப்பினர் தொகை இருக்கிறதா?' என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டபோது, சபைத் தலைவர் 'போதுமானதேயாகும்,' என்று கூறி நிகழ்ச்சி நிரல்படி செயலாற்றியுள்ளார்.

கேட்டீரா, சேதி!

புதுடில்லி, டிச 24—

1954—55-ம் ஆண்டில் இந்திய தபால்—தந்தி இலாகா பலருக்கு நஷ்ட ஈடாக ரூ. 2,59,269 கொடுத்துள்ளதாம்!

இந்த நஷ்ட ஈட்டில் 37 சதவிகிதம் இலாகா அதிகாரிகளால் ஏற்பட்டதாம். சென்ற ஆண்டு இது 47 சதவிகிதமாக இருந்ததாம்.

இலாகா அதிகாரிகளின் பொறுப்பற்ற போக்கு, நம்பிக்கை மோசம் ஆகியவைகளால் 47 சதவிகிதம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம். ரூ 64,678 சம்பந்தப்பட்ட நஷ்டத்திற்கு யார் பொறுப்பு என்று இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லையாம்.

பற்றுக்குறை வரவு - செலவுத் திட்டம்

பெங்களூர், டிச. 22—

அடுத்த 5 திங்களுக்கான புதிய மைசூர் மாநில வரவு - செலவுத் திட்டத்தில் ரூ. 4,49,90,000 பற்றுக்குறை ஏற்படுகிறது.

இந்தத் துண்டைச் சரிப்படுத்த புதிய வரிகளோ, வரி உயர்வோ எதும் இல்லை.

ஒப்புக்கொள்ளாதாம்!

சென்னை, டிச 25—

'நாட்டில் பல்வேறு தொழில்களுக்கு பல்வேறு சாதிகள் உள்ளன; ஒரு குறிப்பிட்ட தொழிலை மற்றவர்கள் செய்ய முன்வந்தால் அரசாங்கம் ஆதரிக்குமா?' என்று சட்டசபையில் கேட்கப்பட்டபோது, அமைச்சர் பக்தவத்சலம் பதிலளிக்கையில், 'ஒரு குறிப்பிட்ட தொழிலை ஒரு குறிப்பிட்ட சாதியினரே செய்யவேண்டும் என்ற கொள்கையை சென்னை அரசாங்கம் ஒப்புக்கொள்ளாது,' என்று கூறியுள்ளார்.

இந்தியிலேயே உத்தரவு

புதுடில்லி, டிச. 24—

இந்திய இராணுவ அணிவகுப்பின்போதும், உடல்பயிற்சியின்போதும், போர் வீரர்களுக்கு இனி இந்தியிலேயே கட்டளையிடவேண்டும் என்ற உத்தரவு வரும் சனவரி 26-ந் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்படுமாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டன்கீழ் சாத்தனூர் கால்வாய் திட்டத்திற்கு ரூ. 2,89,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதனுல் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள 20,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதி கிடைக்குமாம்.

கழகக் கூட்டங்கள்

★

எரியோடு :

சந்தைத் திடலில்

27—12—56 மாலை 6 மணிக்கு

எரியோடுபிரிக்காதி.மு.க துவக்கவிழா

தலைவர் : எம். காதர்சா

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

பி. பரமேசுவரன்

என். மூத்து, ஏ. சுப்பையா

★

சென்னை 37-வது வட்டம் :

இராயப்பேட்டை

(புதுப்பேட்டை சதீட்ரல் சாலை அருகிலுள்ள திடலில்)

26—12—56 மாலை 6 மணிக்கு

தி. மு. க. 6-வது ஆண்டு விழாவும் தேர்தல் நிதி அளிப்பும்

தலைவர் : கோ. இளவரசு

பேசுவோர் :

அண்ணா

என். வி. நடராசன்

ஆர். எஸ். பாண்டியன்

குறிப்பு :—பெண்கள் படிப்பக சார்பிலும் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

சென்னை சில்லறை வியாபாரிகள் சங்கப் பொதுக்கூட்டம்

27—12—56 மாலை 6 மணிக்கு மேற்படி சங்கச் சார்பில், சென்னை—பெரம்பூர் பென்ஷனர் லேன் திடலில் (ஜி. 3 போலீஸ் நிலையம் எதிரில்), திரு வி. ஜி. ராவ் எம்.எல்.சி. தலைமையில், சர்வகட்சிப் பொதுக்கூட்டம் நடைபெறும். தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் பி. இராமமூர்த்தி எம்.எல்.ஏ., டி. குப்புசாமி, பி. பெளரிலால், பி என். பி. கபூர் ஆகியோர் பேசுவர்.

சென்னை கிளைக் கழகச் செயலாளர்களுக்கு

வேண்டுகோள்

★

தேர்தல் நிதி வாரத்தில் திரட்டிய நிதியை, 26—12—56 அன்று சென்னை - இராயப்பேட்டை (புதுப்பேட்டை) யில் நடைபெறும் 37-வது வட்ட தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் செலுத்துமாறு சென்னையிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களைக் கேட்டுக்கொள்கிறேம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

மூன்று மாவட்டங்களாக மலபார் பிரிகிறது

கள்ளிக்கோட்டை, டிச. 25—

மலபார் மாவட்டம் அடுத்த திங்கள் ஆரம்பத்தில் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.

கண்ணனூர், கள்ளிகோட்டை, பாலக்காடு என அவை இயங்கும்.

மீண்டும் வெளிவருகிறது **'போர்வாள்'** வார வெளியீடு

ஜனவரி முதல்—சனிதோறும் வெளிவரும்

ஆசிரியர் : காஞ்சி—மணிமொழியார்

★

தோழர் மா. இளஞ்செழியன் தீட்டும் எழுத்தோவியங்கள்; அச்சம் தயை தாட்சண்யமற்ற அரசியல் கட்டுரைகள்; உலகைத் திருத்திய உத்தமர்களின் வரலாறுகள்; தோழர் இராதாமணாளன் எழுதும், தீங்கரும்பு போன்ற தொடர்கதைகள்; தேனாய்—தென்றலாய்—தெள்ளுசுவைத் தீம்பாவாய் இனிக்கும் சிறுகதைகள்; நெஞ்சை அள்ளும் கவிதைகள்—உரையாடல்கள்—கடிதங்கள்—இலக்கிய விளக்கங்கள்—விஞ்ஞானக் குறிப்புகள்

இத்தனையும் உண்டு இதழில்! அத்தனையும் அறிவுக்கு விருந்து! ஆனால் வைதீகத்துக்கு வேட்டு மருந்து!

தனி இதழ் அணு 2 ஆண்டு சந்தா ரூ. 6—8—0

எல்லா ஊர்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை. ஏஜெண்டு நிபந்தனைகளுக்குக் கடிதம் எழுதவும்.

குறிப்பு :—இரண்டு மாதத்துக்கு ஒரு தாள் வீதம் 6 தாள்களில் 10×8 அளவில் ஒவ்வொரு தாளிலும் ஒரு படம் உள்ள 'போர்வாள்' காலண்டர் தயார். விலை அணு 8 ஏராளமான புதுவித பொங்கல் வாழ்த்துக்கள் எங்களிடம் கிடைக்கும். மாதிரி செட் வேண்டுவோர் ரூ 3—0—0 அனுப்பவும்.

'போர்வாள்' அலுவலகம், 128 பிராட்வே, சென்னை-1

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

26—12—56 புதன் மாலை 6 மணிக்கு

விளையாட்டுப்பகுதித் தலைவர் :

சென்னை உணவு அமைச்சர் எம். பக்தவத்சலம்

ரேக்ளா, சைக்கிள், ரிக்ஷா ஓட்டப்பந்தயங்களும் சர்க்கஸ், நந்திரக்காட்சி, பம்பாய்நடனம், ஓவியக்கலை-இன்னும் பல

★

சகுந்தலா கலை அரங்கில் —நண்பர் நாடக மன்றம் அளிக்கும்

'அன்பின் சிகரம்' தமிழ் சமூக நாடகம்

எம். எஸ். மோகன்—கண்டிராக்டர்

தி. மு. க. தேர்தல் நிதிக்காக!

இடைப்பாடியில்

கலை நிகழ்ச்சிகள்!

27-12-56 மாலை 4-மணிக்கு, சேலம்— இடைப்பாடி அசோகா நாடக அரங்கில் தி. மு. க. தேர்தல் நிதிக்காக கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கைப்பந்தாட்டம்; குஸ்தி; குறவன்—குறத்தி நடனம்; இசை விருந்து; ஓரங்க நாடகம்; மாறு வேடங்கள் ஆகியன நிகழ்ச்சியில் இடம் பெறும்.

சென்னை — அரக்கோணம் மின்சார இரயில் பாதைத் திட்டம்

சென்னை—அரக்கோணம் மின்சார இரயில் பாதை அமைப்புத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளதாகவும், தாம் பதவியிலிருந்து விலகுவதற்கு முன் இத்திட்டத்தை மேற்கொள்ளும்படி செய்வதாகவும், இரயில்வே துணை அமைச்சர் அழகேசன், வில்லிவாக்கம் ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த இராசமங்கலம் பகுதியில் புதிதாக போடப்பட்டுள்ள வீதி விளக்குகளை ஏற்றிவைத்துப் பேசுகையில் கூறியுள்ளார்.

வெங்காய ஏற்றுமதி

டில்லிப் பேரரசின் முடிவு?

பம்பாய், டிச. 22—

கூட்டுறவு சங்கங்கள் மூலம், பாகிஸ்தான், போர்ச்சுகீஸ் ஆகிய பகுதிகளுக்குத் தவிர, மற்ற பகுதிகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்வதை அனுமதிப்பதென இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது; இந்த அனுமதி 1957 பிப்ரவரி திங்கள் முடியும்வரை நீடிக்கும்.

சென்னை புதுவை துறைமுகங்களிலிருந்து கப்பல் மூலம் 5 டன்களும், கல்கத்தா, இராஜ்கோட்டையிலிருந்து 50 டன்களும், பம்பாய், விசாகபட்டிணத்திலிருந்து 30 டன்களும் வெங்காயம் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுமாம்.

அதிகப்படியாக வெங்காயம் ஏற்றுமதி செய்ய கூட்டுறவு சங்கங்கள் அனுமதி கோரும்போது, மாநில அரசாங்கத்தின் சிபாரிசை ஆராய்ந்த பின்னர்தான் அனுமதியளிக்கப்படுமாம்.

பிறவிக் குருடர் பரீட்சையில் தேறினர்!

ஆமதாபாத், டிச. 24—

ஆமதாபாத்தில் பிறவிக் குருடரான ஜெகதீஷ் என்பவர், பத்தாவது வகுப்புப் பரீட்சையில், நல்ல தகுதி அம்சத்துடன் தேறியுள்ளார் என்று செய்தி வெளியாகியுள்ளது.

பரீட்சையின்போது, கேள்விகளுக்குத் தக்க விடையை ஜெகதீஷ் மற்றொருவரிடம் கூற, அவர் அதை விடைத்தாளில் எழுதினராம்.

டாக்டர் தொழிலில் ஈடுபட்டுள்ள தந்தையைப் போன்று தானும் நோய்களைக் கண்டறிந்து, மகளுக்கு நல்ல மருந்து தர வேண்டுமென அவர் விரும்புகிறராம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

6—1—57 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு

பெத்துநாய்க்கன்பேட்டை அம்மன் கோயில்தெரு டாக்டர் குருசாமி முதலியார் உயர்நிலைப் பள்ளியில்

பேசுவோர் :

கி. மனோகரன் - கண்ணதாசன்

நடிப்பிசைப் புலவர் **கே. ஆர். இராமசாமி**

நன்கொடை : ரூ. 1, அணு 8.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.